தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 249 | 4 Pages | 6.4.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 249 | 4 பக்கங்கள் | 6.4.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு**

**விளக்கம்:**

**ஒருவனுடைய உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாக உணர்ந்தால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உள்ள தென எண்ண வேண்டா.**

## அமெரிக்காவில் இந்திய வம்சாவளியை சேர்ந்த பாதிரியார் சுட்டுக்கொலை



வாஷிங்டன், ஏப்.6

அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணம் செனிகா நகரில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் அமைந்துள்ளது. அங்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அருள் காரசாலா என்பவர் பாதிரியாக பணிபுரிந்து வந்தார். இந்தநிலையில் ஆலய நிர்வாக அலுவலகத்தில் அவரை சந்திக்க கேரி ஹெர்மேஷ் (வயது 66) என்பவர் சென்றிருந்தார்.

அவர்கள் பேசியபோது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த கேரி திடீரென பாதிரியாரை துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோடினார். படுகாயம் அடைந்த காரசாலாவை அங்கிருந்தவர்கள் மீட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார். இதற்கிடையே அங்கு விரைந்த போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்திய கேரி ஹெர்மேசை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## இலங்கை சென்றடைந்தார் பிரதமர் மோடி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு

கொழும்பு, ஏப்.6

பிரதமர் மோடி தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நேற்று நடந்த 'பிம்ஸ்டெக்' மாநாட்டில் பங்கேற்றார். பின்னர் தாய்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு விமானம் மூலம் இலங்கை புறப்பட்டார். தலைநகர் கொழும்பு விமான நிலையத்தில் இரவு தரையிறங்கிய பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கையின் மூத்த மந்திரிகள் அடங்கிய குழு ஒன்று பிரதமரை விமான நிலையத்தில் வரவேற்றது. அண்டை நாடான இலங்கையில் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி, அங்கே பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதில் முக்கியமாக, இலங்கை அதிபர் அனுரா குமார திசநாயகாவுடன் இன்று (ஞாயிற்றுக்கிழமை) விரிவான பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதில் பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை விரிவாக்குவது குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

பேச்சுவார்த்தையின் முடிவில் இந்தியா இலங்கை இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இரு நாடுகளுக்கு இடையே முதல் முறையாக ராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகும் என தெரிகிறது. இந்தியப்பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இலங்கையுடனான ராணுவ ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதைத்தவிர எரிசக்தி, இணைப்பு, டிஜிட்டல்மயமாக்கல், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளிலும் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை அதிகரிக்கவும் பிரதமர் மோடியின் பயணம் உதவும் என இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜா கூறியுள்ளார். பிரதமர் மோடியின் இந்த பயணத்தின்போது இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களையும் அவர் சந்தித்து பேசுகிறார். மேலும் இந்தியா உதவியுடன் இலங்கையில் நடந்துள்ள பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடியும், இலங்கை அதிபரும் இணைந்து தொடங்க வைக்கிறார்கள். மேலும் சோலார் திட்டம் ஒன்றுக்கும் இருவரும் இணைந்து அடிக்கல் நாட்டுகின்றனர்.

## அமெரிக்க பொருட்கள் மீது கூடுதலாக 34 சதவீத வரி; சீனா பதிலடி



பிஜீங், ஏப். 6

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றதுமுதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, அமெரிக்க பொருட்கள் மீது பல்வேறு நாடுகள் அதிக வரி விதிப்பதாகவும், அதற்கு பதிலடியாக அந்தந்த நாடுகளில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் டிரம்ப் அறிவித்தார்.

அதன்படி, இந்தியா, சீனா, இலங்கை, கம்போடியா, தைவான், ஐரோப்பிய யூனியன் உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்துள்ளார். இந்தியாவுக்கு கூடுதலாக 26 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 34 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

சீனா மீது ஏற்கனவே 20 சதவீத கூடுதல் வரி விதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது கூடுதல் வரி 34 சதவீதம் விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரி 54 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால், சர்வதேச வர்த்தகப்போர் மூண்டுள்ளது. டிரம்ப்பின் இந்த அறிவிப்பு சர்வதேச வர்த்தகம், பங்குச்சந்தை உள்பட பல்வேறு துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சீனா கூடுதலாக 34 சதவீத வரி விதித்துள்ளது. டிரம்ப் அறிவித்துள்ள இறக்குமதி வரி விதிப்பு 10ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ள நிலையில் அந்த நாளில் இருந்தே அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கான கூடுதல் வரிவிதிப்பு அமலுக்கு வரும் என்று சீனா தெரிவித்துள்ளது. சீனாவின் இந்த வரிவிதிப்பு நடவடிக்கை அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இதன் மூலம் இருநாடுகளுக்கு இடையே வர்த்தகப்போர் தீவிரமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்6

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், தையூர் கிராமம், பாலமாநகரைச் சேர்ந்த ஹரிதாஸ் (வயது 32) என்பவர் 1.4.2025 அன்று இரவு தனது மனைவி சுகந்தி, மூத்த மகன் லியோ டேனியல் மற்றும் இளைய மகன் ஜோ. டேனியல் ஆகியோருடன் இருசக்கர வாகனத்தில் காயார் கிராமத்தில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பும் வழியில் காப்பு காட்டு வளைவின் அருகில் கேளம்பாக்கத்தில் இருந்து காயார் கிராமத்தை நோக்கி எதிர் திசையில் வந்த நான்கு சக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் ஹரிதாஸ் மற்றும் அவரது மூத்த மகன் செல்வன். லியோ டேனியல் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், மனைவி சுகந்தி மற்றும் ஜோ டேனியல் ஆகிய இருவரும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சுகந்தி சிகிச்சை பலனின்றி 2.4.2025 அன்று அதிகாலை உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.



இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாயும், காயமடைந்த சிறுவனுக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அண்ணா சிலை மீது திமுக பாஜக கொடி: தஞ்சாவூரில் பரபரப்பு

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகே அண்ணா சிலை உள்ளது. இந்த அண்ணா சிலை அருகே இன்று திமுக மகளிர் அணி கூட்டம் நடைபெறுகிறது. இதற்காக அந்த பகுதி முழுவதும் தி.மு.க. கொடிகள் கட்டப்பட்டு உள்ளன.

இந்தசூழலில், அண்ணா சிலையின் கழுத்தில் திமுக மற்றும் பாஜகவின் கொடிகளை மர்மநபர்கள் போர்த்திவிட்டு சென்றிருக்கின்றனர். இதனை இன்று காலை கண்ட கட்சியினர் அதிர்ச்சியடைந்தனர். இதுபற்றி உடனடியாக போலீசாருக்குதகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, விரைந்துவந்து அண்ணாசிலையின் கழுத்தில் கிடந்த திமுக பாஜக கொடிகளை அகற்றினர்.



நள்ளிரவில் யாரோ மர்மநபர்கள் வந்து அண்ணா சிலை மீது திமுக பாஜக கொடியை போர்த்தி சென்றிருக்கலாம் என்று போலீசார் தெரிவித்தனர். இதுபற்றி போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர். இந்த சம்பவம் தஞ்சாவூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## தமிழக-கேரள எல்லையில் மங்கலதேவி கண்ணகி கோவில் சித்ரா பௌர்ணமி விழா

தேனி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள பளியன்குடி அருகில் தமிழக கேரள எல்லையில் மங்கலதேவி கண்ணகி கோயில் உள்ளது. இந்தக் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்ரா பௌர்ணமி விழா மிகச் சிறப்பாக நடைபெறும் ..இவ்விழாவினை மையமாக வைத்தே கண்ணகி கோயிலுக்குச் செல்ல பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்த தினத்தில் தமிழகம் மற்றும் கேரளாவை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது வழக்கம்.



வரும் மே 12 ஆம் தேதி சித்ரா பௌர்ணமி தினத்தன்று கண்ணகி கோயில் சித்ரா பௌர்ணமி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது . இதனை அடுத்து தமிழககேரளா அரசு சார்பில் கண்ணகி கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு செய்ய வேண்டிய வசதிகள் குறித்து அனைத்துதுறை அதிகாரிகளுக்கான ஆலோசனை கூட்டம் தேக்கடியில் உள்ள ராஜீவ் காந்தி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தேனி மாவட்ட கலெக்டர் திரு.ரஞ்சித் சிங் இ. ஆ.ப அவர்கள், இடுக்கி மாவட்ட கலெக்டர் திரு விக்னேஸ்வரி இ.ஆ.ப அவர்கள் தலைமை வகித்து, மங்கலதேவி கண்ணகி கோயில் அறக்கட்டளை குழுவினர் மற்றும் இரு மாநில போலீஸ் கண்ணகி கோயில் அறக்கட்டளை குழுவினர் மற்றும் இரு மாநில போலிஸ் சுகாதாரம் மற்றும் அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.. இக்கூட்டத்தில் மங்கலதேவி கண்ணகி கோவில் வளாகத்தில் நிறைந்திருக்கும் முட்புதர்களை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும். விழா நடைபெறும் நாளில் அதிகாலை காலை 6:00 மணி முதல் மாலை 3 மணி வரை மட்டுமே பக்தர்கள் கோயிலுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும். மாலை 5 மணிக்கு மேல் கோவிலில் யாரும் இருக்கக்கூடாது. மேலும் தமிழக சார்பில் ஒரு பூசாரியும், கேரளா சார்பாக ஒரு பூசாரியும் இதில் இருக்க வேண்டும்.

தமிழக மற்றும் கேரளாவில் இருந்து வரும் பக்தர்களுக்காக அன்றைய தினம் மட்டுமே கோவிலுக்கு செல்ல ஜீப், கார்கள் இயக்கப்படும். கோவில் வளாகத்தில் ஒளி பெருக்கி வைக்கதடைவிதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பிளாஸ்டிக் குறித்தல் எளிதில் தீப்பற்றும் பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர், உணவு, மருத்துவம், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் .பக்தர்கள் ஓய்வு எடுப்பதற்காக கோவில் வளாகத்தில் இடம் அமைக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு இரு மாவட்ட கலெக்டர்களும் அறிவுறுத்தினர் ....



திருப்பூரில் கணக்கம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட அய்யம்பாளையம்பகுதியில்தனியார்பனியன்கம்பெனியில் இடி விழுந்து விபத்தை ஏற்பட்டது. பேப்ரிக் மிஷின் ஒரு சேதம் இதன் மதிப்பு 2 கோடி மதிப்புள்ள பொருட்கள் சேதாரம் ஏற்பட்டுள்ளது. உயிர்பலிகள் எதுவும் ஏற்படவில்லை காலை அதிகாலையில் 3 மணி அளவில் சம்பவம் நடந்திருக்கு பெருமாநல்லூர் காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகிறார். அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

## தேவகோட்டை முப்பையூரில் முதல்வர் பிறந்த நாள் விழா நீர்மோர் பந்தல் திறப்பு




கோடைகால வெய்யிலினால் பொதுமக்கள் அவதியடைவதை தடுக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு. க. ஸ்டாலின் அன்மையில் கழக நிர்வாகிகளுக்கு அறிவித்ததன் அடிப்படையில்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரில் தேவகோட்டை முப்பையூரில் பொதுமக்களுக்காக நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டுள்ளது.

தேவகோட்டை தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் நாகானி ரவி, கழக மாணவரணி துணைச்செயலாளர் முப்பையூர் ஜெ. இராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையேற்று திறந்து வைத்தனர்...

இந்த நீர்மோர் பந்தலில் மோர், இளநீர், வெள்ளரி, பப்பாளி, உள்ளிட்ட பழங்கள் பொதுமக்களின் தாகத்தை தீர்த்திட வழங்கப்பட்டது...

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளர் சீமான் சண். சுப்பையா, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முப்பையூர் சிவா, மாணவரணி தல கணேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு: 9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM



மதுரை மாநகர் அண்ணா நகர் 80 அடி சாலையில் A.K டவர் முதல் மாடியில் அம்பிகா தியேட்டர் அருகில் புதிதாக தொடங்கப்பட்ட மதுரையில் மிக பிரமாண்ட உலக தர வாய்ந்த வைர நகைகள் 100% சதவீத தோஷ மில்லாத வைரங்கள் வைர நகைகள் 100% சதவீத HUID சர்வதேச அங்கிகாரம் பெற்று தரம் வாய்ந்த ஹால்மார்க் நகைகள் மற்றும் இதர நகை வகைகள் கிடைக்கும் மிக பெரிய புகழ் மிக்க ஒப்பற்ற ஸ்தாபனமாக திகழும் ப்ளு மேக் டைமண்ட்ஸ் Brilliance with Quality மிக பிரமாண்டமான நகை மாளிகை திறப்பு விழா இனிதே இன்று நடைபெற்றது இவ்விழாவில் கடை உரிமையாளர் நவின் அவர்கள் அனைவரையும் வரவேற்று குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார் உடன் அவர்களின் குடும்பத்தார்கள் உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொண்டனர் அப்பகுதி மக்கள் வைரம் தங்கம், வெள்ளி, போன்ற பொருட்கள் வாங்க சிறந்த ஸ்தா பனமாக சிறப்பாக அமைத்துள்ளது அக்கடை அமைந்துள்ள பகுதி வாழ் சுற்றுவட்டார மக்கள் மக்கள் பயன்பெறும் வகையில் சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது விரைவில் மொத்த விலை விற்பனை தொடங்கப்படும் என நகை கடை ஷோரூம் உரிமையாளர் நவின் அவர்கள் தெரிவித்துள்ளார்

தினகனி



# தென்காசி காசி விசுவநாதர் கோவில் கும்பாபிஷேகத்திற்கு உயர் நீதிமன்றம் அனுமதி

தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் கும்பாபிஷேகம் வரும் ஏழாம் தேதி நடப்பதாக அறிவிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வந்தன.

இந்த நிலையில் தென்காசியைச்சேர்ந்த நம்பிராஜன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கோவிலில் திருப்பணிகள் முறையாக நடக்கவில்லை என்றும்அதில்முறைகேடுகள் நடந்திருப்பதால் முழுமையான பணிகள் நடந்த பின்னரே கும்பாபிஷேகம் நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நேற்று நீதிபதிகள் நிஷாபானு, ஸ்ரீமதி அமர்வு விசாரணை செய்து கும்பாபிஷேகத்திற்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று இந்த வழக்கு மீண்டும் பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு வந்தது. இதில் அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன் ஆஜரானார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான டி எஸ் ஆர். வேங்கட ரமணாவும் இந்த வழக்கில் ஆஜரானார்

கும்பாபிஷேகம் நடத்துவதற்காக பணிகள் பூர்த்தியடைந்து யாகசாலை பூஜைகளும் துவக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் கும்பாபிஷேகத்தை தடை செய்வது சரியாக இருக்காது என்று வாதிடப்பட்டது இதை அடுத்து கும்பாபிஷேகம் நடத்த





விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவை விளக்கி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# தமிழக மீனவர்கள் 11 பேர் விடுதலை

சென்னை, ஏப்.6

ராமேசுவரத்தில் இருந்து கடந்த மாதம் 26 ம் தேதி 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இதில் ராமேசுவரம் வேர்க்கோடு பகுதியை சேர்ந்த ஜெர்சிஸ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் பாக்கியராஜ், சவேரியார் அடிமை, முத்து களஞ்சியம், எபிரோன், ரஞ்சித், பாலா, யோவான், இன்னாசி, அர்னாட்ரிச்சே, கிறிஸ்து, அந்தோணி ஆகிய 11 மீனவர்களும் நடுக்கடலில் மீன்பிடித்து



கொண்டிருந்தனர்.

அப்போது, 2 ரோந்து கப்பல்களில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், ராமேசுவரத்தை சேர்ந்த இந்த விசைப்படகு மற்றும் அதில் இருந்த 11 மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி சிறைபிடித்து கைது செய்தனர். தொடர்ந்து மன்னார் கோர்ட்டில் 11 மீனவர்களும் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை வருகிற 9ந்தேதி வரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். தொடர்ந்து வவுனியா சிறையில் 11 பேரும் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பிரதமர் மோடி இலங்கைக்கு செல்லவுள்ள நிலையில் ராமேசுவரம் மீனவர்கள் 11 பேரை நிபந்தனையின்றி விடுதலை செய்து இலங்கை ஊர்க்காவல் துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைதூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் விரைவில் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பள்ளி விடுதியில் மாணவர்களிடம் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டவர் கைது

திருச்சி, ஏப்.6

திருச்சி சமயபுரம் அருகே உள்ள ஒரு அரசு உதவி பெறும் பள்ளியில் ஏராளமான மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளி அருகே மாணவர்களுக்கான விடுதி இயங்கி வருகிறது.

இங்கு 110 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள். இந்த விடுதியில் தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த பாதிரியார் குழந்தைநாதன் (வயது 48) என்பவர் வார்டனாக பணியாற்றி வருகிறார். இவரது நண்பர் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த சுந்தர்ராஜன் (40) என்பவர் திருச்சியில் உள்ள தனியார் கிறிஸ்தவ கல்லூரியில் பாதிரியாருக்கான படிப்பை படித்து வருகிறார்.

இந்த நிலையில் விடுமுறை நாட்களில் விடுதிக்கு வரும் சுந்தர்ராஜன், பள்ளி மாணவர்களிடம் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாணவர்கள் விடுதி வார்டனிடம் பலமுறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த திருச்சி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ராகுல் காந்தி சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மாணவர்களிடம் விசாரணை நடத்தினார்.

பின்னர் அவர் லால்குடி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் பள்ளி விடுதி மாணவர்களுடன் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டதாக சுந்தர்ராஜன் மற்றும் நடவடிக்கை எடுக்காத பாதிரியார் குழந்தைநாதன் ஆகியோரை போக்சோ வழக்கில் போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் கோர்ட்டு உத்தரவின் பேரில் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அபாயகரமான தொழில்களில் பணியமர்த்த கூடாது: தூத்துக்குடி கலெக்டர் எச்சரிக்கை

தூத்துக்குடி, ஏப்.6

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை 2025க்குள் மாற்ற வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்பு படை ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. மாவட்டத்தில் கடைகள், நிறுவனங்கள், கட்டுமானப் பணியிடங்கள், தொழிற்சாலைகள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் காணவாய்ப்புள்ள அனைத்துத் தொழிற்கூடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மாவட்டதடுப்புப்படை, பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள், அரசுத் துறை அலுவலர்களிடையே விழிப்புணர்வு



நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

2024 மற்றும் 2025 ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம்1986ன்கீழ், மாவட்ட தடுப்புப் படையுடன் கூட்டாய்வுகள் மற்றும் இதரபுகார்களின்அடிப்படையில் கடைகள் நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் 3 குழந்தைத் தொழிலாளர்கள், 7 வளரிளம் பருவத் தொழிலாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களை பணிக்கு அமர்த்தியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திய வேலையளிப்பவர்கள் மீது காவல் நிலையங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எந்தவிதமான பணியிலும், 18 வயதுக்குட்பட்ட வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களிலும் பணியில் அமர்த்தக் கூடாது. குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தினால் குறைந்தபட்சம் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை அபராதமோ 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனையோ அல்லது இரண்டுமே சேர்த்தோ விதிக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பகுதிகளில் குழந்தைத் தொழிலாளர்களை எவரேனும் பணியில் அமர்த்தியிருந்தால் அது குறித்த விவரத்தினை குழந்தைப் பாதுகாப்பு உதவி எண் 1098 என்ற எண்ணிற்கு அழைத்தோ அல்லது மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்திற்கு 04612340443 என்றஎண்ணில்தொடர்பு கொண்டோ தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் பள்ளி விடுமுறை நாட்களிலும் குழந்தைத் தொழிலாளரை பணிக்கு அமர்த்தக் கூடாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம்: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஏப்.6

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள சென்னை ஒலிம்பிக் அகாடமியின் மூன்றாவது தளத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தை திறந்து வைத்தார்.

விளையாட்டு என்பது விளையாடும் வீரர்களுக்கு மட்டுமல்லாமல் அந்த விளையாட்டு வீரர் சார்ந்த நாட்டின் பொதுமக்கள், ரசிகர்கள் அனைவருக்கும் மிகுந்த உற்சாகத்தை அளிக்க வல்லதாக திகழ்கின்றது. ஒரு விளையாட்டு வீரர் வெற்றி பெறும் போது, அவர் சார்ந்த நாட்டின் அனைவரும் மிகுந்த உற்சாகமும், தன்னம்பிக்கையும் கொள்கின்றனர். உலகின் முன்னணி நாடுகள் தங்களது விளையாட்டு வீரர்களை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மிகுந்த வலிமை மிக்கவர்களாக உருவாக்கி வருகின்றனர். சர்வதேச போட்டிகளில் நமது நாட்டு விளையாட்டு வீரர்கள் வெற்றிகள் பெற்றாலும் அதிக பதக்கங்கள் வெல்ல முடியாத சூழ்நிலை உள்ளது.



தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டினை இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகின் முன்னணி விளையாட்டுத்தலமாக உருவாக்கி வருகின்றார்கள். அதற்காக, சென்னை மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு அரங்கங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், அதிநவீன பயிற்சி கூடங்கள் ஆகியவற்றை அமைத்து வருகின்றார்.

சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற நமது விளையாட்டு வீரர்களுக்கு போட்டி நடைபெறும் நாட்டின் சுற்றுச்சூழலுக்கேற்ப உடல் தகுதி, மன வலிமை, உளவியல் ரீதியாக தன்னம்பிக்கை, காயங்கள் ஏற்பட்டால் உடனடியாக மீண்டு அடுத்தடுத்த போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அறிவியல் ரீதியான வசதிகள் தேவைப்படுகின்றது.

இதனை கருத்திற்கொண்டு புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தில் விளையாட்டு வீரர்களின் செயல்திறன், உடற்பயிற்சி, உடல் ஆரோக்கியம், உடலியல், உளவியல் மற்றும் விளையாட்டு மருத்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதும், உடற்பயிற்சி அறிவியலின் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும் நோக்கமாக கொண்டு அதிநவீன மருத்துவக் கருவிகள், விளையாட்டுகளின் தேவைக்கேற்ப விளையாட்டு வீரரின் உடலில் தேவைப்படும் தசைகளை வலுவேற்றும் வகையிலான சிறப்பு உபகரணங்கள் நிறுப்பட்டுள்ளன. மேலும், இம்மையத்தில் மனநல நிபுணர், ஊட்டச்சத்து நிபுணர், சிறப்பு பயிற்சியாளர்கள், உளவியலாளர்கள், அதிக பயிற்சி காரணமாக ஏற்படும் தசைப்பிடிப்பை சீரமைக்கும் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 5.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த உள் விளையாட்டு அரங்கத்தில் நிர்வாக கட்டடம், பயிற்றுநர் அறை, விளையாட்டு வீரர்கள் தங்கும் அறை, பார்வையாளர்களுக்கான இருக்கைகள், மரத்திலானதரைதளம், உபகரணங்களுக்கான இருப்பு அறை மற்றும் ஒளிரும் மின்விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கத்தில் கையுந்து பந்து, கூடைப்பந்து, டேபிள் டென்னிஸ், இறகுப்பந்து போட்டிகள் நடத்தவும், பயிற்சி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ. 50 லட்சம் மதிப்பில் பளுதூக்குதல் பயிற்சி மையத்தையும் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்துவைத்தார். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் கபட நாடகம்... கச்சத்தீவு கைவிட்டு போகக்காரணம் தி.மு.க.தான் விஜய் சாடல்

சென்னை, ஏப்.6

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

கச்சத்தீவு மீட்கப்படுவதே மீனவர்கள் பாதுகாப்புக்கான நிரந்தரத் தீர்வு. ஐ.நா.வின் கடல்சார் சட்டப் பிரகடனத்தை இலங்கை அரசு எப்போதும் மதித்துக் கடைப்பிடிக்க வேண்டும். மீனவர்களின் உயிரையும் உணர்வையும் பாதுகாப்பதே மத்திய மற்றும் மாநில அரசுகளின் தலையாய கடமை. மீனவர்கள்நலன்மற்றும்கச்சத்தீவு சார்ந்த தமிழக வெற்றிக் கழகப் பொதுக்குழுத் தீர்மானம் தந்த அழுத்தம் தமிழ்நாடு அரசைத் தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாடான கச்சத்தீவு மீட்பு மற்றும் மீனவர் பாதுகாப்பு நிலைப்பாடு நோக்கி நகர வைத்துள்ளது.

1974ல் கச்சத்தீவு கைவிட்டுப் போகக் காரணம், ஆட்சி அதிகாரப் பசி கொண்ட அன்றைய ஆளும் கட்சியான தி.மு.க.தான். 1999ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை மத்திய அரசுகள் இயங்கியதே தி.மு.க.வின் தயவினால் தான். அத்தகைய நிலையில், அப்போதெல்லாம் கச்சத்தீவு விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு, இப்போது மட்டும் தனித் தீர்மானம் என்ற கண்துடைப்பு நாடகம் ஏன்? இந்தக் கேள்வியே தமிழக மக்களிடமும் எழுந்துள்ளது.

அன்று முதல் இன்று வரை மத்திய அரசுக்கு, வாஞ்சையோடு வருடிக் கொடுத்து மறைமுக அன்பை வெளிப்படுத்தும் கடிதம் எழுதும் கபட நாடகம் மட்டுமே இந்த வெற்று விளம்பர மாடல் தி.மு.க. அரசின் மாயாஜால வித்தை. அதிகார மையமாக இருக்கும்போதெல்லாம் கை விட்டுவிட்டு 2026 சட்டமன்ற தேர்தல் நெருங்குவதால், இப்பொது தனித் தீர்மானம் இயற்றும் கபட நாடகத் திமுகஅரசின்அந்தர்பல்டி அரசியலை தமிழக வெற்றிக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலால் தமிழக மீனவர்கள் இதுவரை 800க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர், அவர்களின் உடைமைகளும் வாழ்வாதாரமும் பறிக்கப்பட்டுவிட்டன. குஜராத் போன்ற மற்ற மாநில மீனவர்களுக்காக மட்டும் பாதுகாப்பாக இருக்கும் மத்திய அரசு. எங்கள் தமிழக மீனவர்களை மட்டும் கை விடுவது ஏன்?. கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய அரசின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் மத்திய பாஜக அரசு, கச்சத்தீவு மற்றும் தமிழக மீனவர்கள் விவகாரத்தில் பாரபட்சத்துடன் பாராமுகமாகவே இருக்கிறது.



எப்போதும் மீனவ நண்பனாகவே உண்மையான உறுதியுடனும் உணர்வுடனும் நிற்கும் தமிழக வெற்றிக் கழகம், மத்திய பாஜக அரசின்இந்தப்போக்கைத் தீர்க்கமாகக் கண்டிக்கிறது. கச்சத்தீவு மீண்டும் நமது நாட்டுக்குச் சொந்தமாவது மட்டுமே தமிழக மீனவர் பிரச்சினைக்கு ஒரே பரிகாரம் மற்றும் தீர்வு. நிரந்தரத் தீர்வை எட்டும் வரை, இடைக்காலத் தீர்வாக 99 வருடக் குத்தகையாகக் கச்சத்தீவைப் பெற வேண்டும். இதற்கான ஒப்பந்தத்தை மத்திய அரசு எவ்விதச் சமரசமும் இன்றிநிறைவேற்ற வேண்டும். பிரதமர் மோடி கட்டாயமாக இலங்கை அரசிடம் இதை வலியுறுத்திப் பெற வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் பாதுகாப்பும் அமைதியும் நிம்மதியும் நிரந்தரமானதாக இருக்க பொது வாக்கெடுப்பு மட்டுமே ஒரே தீர்வு. நம் கழகத்தின் பொதுக்குழுத் தீர்மானமும்.

தீர்க்கமான நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பே இந்நிலையை நோக்கி நகர சர்வதேச சமூகத்தை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். போர்க் குற்றங்களுக்காகக் கண்டிப்பதோடு, நடுநிலையான பொது வாக்கெடுப்பு நடத்த, இலங்கை அரசுக்கு மத்திய பிரதமர், நேரடியான அரசியல் அழுத்தம் கொடுக்க வேண்டும்

இலங்கை செல்லும் நம் பிரதமர் மோடி, 'கச்சத்தீவு இந்தியாவின் உரிமை நிலம் என்ற பயணத் திட்டத்தை முதன்மையாக வடிவமைக்க வேண்டும். நமது மீனவர்களின் துயர் நீங்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என்ற விதத்தில் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிரதமரின் இந்த இலங்கைப் பயணம், தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாக மட்டுமே இருக்க வேண்டும் என்று தவெக சார்பாக சமரசமின்றி இவை அனைத்தையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு காவல்துறையில் 8 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஏப்.6

தமிழ்நாடு காவல்துறையில் 8 ஐ.பி.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

விவரம் பின்வருமாறு:

★ சென்னை காவல் துறை தலைமையக ஐ.ஜி. விஜயேந்திரபிதாரி சென்னை கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ஐபிஎஸ் அதிகாரி கபில் குமார் ஷரத்கர் சென்னை அமலாக்கப் பிரிவு ஐ.ஜி.யாக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ சென்னை அமலாக்கப் பிரிவு ஐ.ஜி. ஜி.கார்த்திகேயன், சென்னை போக்குவரத்துத்துறை



ஐ.ஜி.யாக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ லஞ்சம் மற்றும் ஊழல் கண்காணிப்புத் துறை இணை ஆணையர் சந்தோஷ் குமார், சென்னை பொருளாதார குற்றப்பிரிவு ஐ.ஜி.யாக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ சென்னை பொருளாதார குற்றப் பிரிவு ஐ.ஜி. சத்யப்ரியா காவலர்நலன் பிரிவு ஐ.ஜி.யாக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ காவலர் நலன்பிரிவு டி.ஐ.ஜி. எம்.துரை காவல் துறை தலைமையக டி.ஐ.ஜி.யாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை டி.ஜி.பி.யாக சீமா அக்ரவால் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ குடிமைப் பொருட்கள் மற்றும் உணவு வழங்கல்துறை ஐ.ஜி. ரூபேஷ் குமார் மீனா கூடுதல் பொறுப்பாக அத்துறையின் டி.ஜி.பி. பொறுப்புகளை கவனித்துக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ளக்காதலி பிரிந்து சென்றதால் வாழ்க்கையில் விரக்தி... வாலிபர் எடுத்த விபரீத முடிவு

கோவை,, ஏப்.6

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் பகுதியை சேர்ந்தவர் கோபி (வயது20). இவர் கோவை பீளமேடு ராஜூ நாயுடு லே அவுட்டில் நண்பர்களுடன் தங்கி கூலி வேலை செய்து வந்தார். அவருக்கு சிவகங்கையை சேர்ந்த திருமணமான பெண்ணுடன் கள்ளக்காதல் ஏற்பட்டது. இதனால் அவர், கள்ளக்காதலியை கோவைக்கு அழைத்து வந்து ஒன்றாக வசித்து வந்தார்.

இதற்கிடையே அந்த பெண்ணின் கணவர் அளித்த புகாரின்பேரில் சிவகங்கை டவுன் போலீசார், கோவை வந்து கோபி மற்றும் அந்த பெண்ணை சிவகங்கைக்கு அழைத்து சென்றனர். பின்னர் அந்த பெண், கணவருடன்செல்லமறுத்து தனது தாயாருடன் சென்றுவிட்டார். அதன்பிறகு கோவை வந்த கோபி, தனது கள்ளக்காதலி பிரிந்து சென்றதால் வாழ்க்கையில் விரக்தி அடைந்தார்.

இந்தநிலையில், சம்பவத்தன்று இரவு அளவுக்கு அதிகமாக மது குடித்து விட்டு பீளமேடு ரெயில்வே தண்டவாளம் பகுதியில் நடந்து சென்ற போது நிலைதடுமாறி கீழே விழுந்து படுகாயம் அடைந்தார்.

இதை அறிந்த அவரது நண்பர், கோபியை மீட்டு அறைக்கு அழைத்து சென்றார். அவர், மறுநாள் காலையில் பார்த்த போது கோபி அசைவின்றி கிடந்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், கோபியை மீட்டு இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள், கோபி ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இது குறித்து பீளமேடு போலீசார்வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏறபடுத்தியது.

# எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணைக்கு தடை நீட்டிப்பு



சென்னை, ஏப்.6

நாடாளுமன்றத் தேர்தலின்போது, மத்திய சென்னையில் பிரசாரம் செய்த அ.தி.மு.க., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக தயாநிதி மாறன் எம்.பி., செலவிடவில்லை என்று குற்றம் சாட்டினார். இதற்கு கடும் எதிப்பு தெரிவித்த தயாநிதி மாறன், தன்னை பற்றி தொகுதியில் அவதூறு கருத்துக்களை தெரிவித்ததற்காக எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அவதூறு வழக்கை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் நிலுவையில்உள்ளது. இந்தவழக்கை ரத்துசெய்யகோரிசென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, அவதூறு வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது.

இந்தநிலையில், எடப்பாடி பழனிசாமி மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது,

தயாநிதி மாறன் இந்த மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை வருகிற 25ந்தேதிக்கு தள்ளிவைத்தார். அதுவரை, ஏற்கனவே வழக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீட்டித்தும் உத்தரவிட்டார்.

# பாறு கழுகுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு: அமைச்சர்

சென்னை, ஏப்.6

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

இயற்கை விவசாயம் மற்றும்கிராமப்புறசூழல்களில் பாறு கழுகுகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக கரிம கழிவுகளை மறு சுழற்சி மூலம் அகற்றுவதில் துப்புரவாளர்களாக பங்கு வகிக்கின்றன. வெண்முதுகு பாறு கழுகு, நீண்ட மூக்கு பாறு கழுகு மற்றும் செம்முக பாரூ கழுகு ஆகிய மூன்று வகை பாரூ கழுகுகளின் எண்ணிக்கை கடந்த 30 வருடங்களில் குறைந்து காணப்பட்டதால் அவை அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அரசு பாறு கழுகுகளை பாதுகாப்பதற்காக டைக்ளோபெனாக் மற்றும் நிம்சுலைடு ஆகிய கால்நடை மருந்துகளை தடை செய்தது மட்டுமல்லாது வாழ்விடங்களை பாதுகாத்தல் மற்றும் வருடாந்திர பாறு கழுகளின் எண்ணிக்கையை கண்காணித்தல் போன்ற பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

2025ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த பாறு கழுகுகள் கணக்கெடுப்பு தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களில் இரண்டு நாட்கள் நடத்தப்பட்டன. இந்த கணக்கெடுப்பை தமிழ்நாடு வனத்துறை முன்னெடுத்து, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநில வனத்துறையுடன் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் முதுமலை புலிகள் காப்பகம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், நெல்லை வன உயிரின சரணாலயம், கேரளாவில் வயநாடு வனவிலங்கு சரணாலயம் மற்றும் கர்நாடகாவில் பந்திப்பூர் புலிகள் காப்பகம், பிலிகிரி ரங்கசாமி கோயில் புலிகள் காப்பகம் மற்றும் நாகர்ஹோலே புலிகள் காப்பகம் ஆகிய பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கணக்கெடுப்பு காட்சி கோண எண்ணிக்கை முறையில் மூன்று மாநிலங்களிலும் மொத்தம் 106 இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. அதில், தமிழ்நாட்டில் 33 இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பின் தரவுகளை ஆய்வு செய்ததில் இந்நிலப்பரப்பில் மொத்தம் 390 பாறு கழுகுகள் உள்ளதாக மதிப்பிட்டுள்ளது. 2023 2024ம் ஆண்டில் நடத்தப்பட்ட பாறு கழுகுகள் கணக்கெடுப்பில் மொத்தம் 320 என கண்டறியப்பட்டது. இது நிலப்பரப்பில் கழுகுகளின் எண்ணிக்கையில் நிலையாக அதிகரித்து வருவதை குறிக்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 157 பாறு கழுகுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இது தமிழ்நாட்டில் கழுகுகளின் எண்ணிக்கையில் அதிகரித்து வரும் போக்கைக் காட்டுகிறது.

இதில் அதிகப்படியாக வெண்முதுகு பாறு கழுகு 110 எண்ணிக்கையாக பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நீண்ட மூக்கு பாறு கழுகு 31, செம்முக பாறு கழுகு 11 மற்றும் எகிப்தியன் பாறு கழுகு 5 எண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்டது. பாறு கழுகுகளின் இனப்பெருக்கத்திற்கு இன்றியமையாத இடமாக முதுமலை புலிகள் காப்பகம் திகழ்கிறது.

சமீபத்திய கணக்கெடுப்பின்படி முதுமலை புலிகள் காப்பகத்தில் 8 இடங்களில் மொத்தம் 60 கூடுகள் செயலில் உள்ளது காணப்பட்டது. அதில் பாறு கழுகுகளின் எண்ணிக்கை 120 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வெண்முதுகு பாறுகழுகு(108)அதனை தொடர்ந்து நீண்ட மூக்கு பாறு கழுகு (10) மற்றும் செம்முக பாறு கழுகு (2) உள்ளது. இக்கணக்கெடுப்பின்போது மொத்தம் 34 பாறு கழுகுகளின் குஞ்சுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. செம்முக பாறு கழுகின் கூடு தென்னிந்தியாவில் முதல் முறையாக முதுமலை புலிகள் காப்பகத்தில் பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இசேவை மையத்தில் அரசு பஸ் டிக்கெட் எடுக்கலாம்




சென்னை, ஏப்.6

அரசுப் பேருந்துகளுக்கான டிக்கெட் முன்பதிவு குறித்து கிராமப்புற மக்களுக்கு தெரியவில்லை என கூறப்படுகிறது.

ஆகையால், தமிழக அரசு கிராமப்புற மக்களின் வசதிக்காக, அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில், இசேவை மையங்கள் மூலம் பேருந்துகளுக்கான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதேபோல், டிக்கெட்டுகளை ரத்து செய்ய வேண்டும் என்றாலும், இசேவை மையம் மூலமாக ரத்து செய்யலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வண்ண ஒளிகளில் ஜொலிக்கும் பாம்பன் புதிய ரெயில்வே மேம்பாலம் வீடியோ



ராமநாதபுரம், ஏப்.6

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே கட்டப்பட்டுள்ள புதிய ரெயில் பாலத்தின் திறப்பு விழா நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு புதிய ரெயில் பாலத்தை திறந்து வைக்கிறார். பிரதமர் வருகையை முன்னிட்டு ராமேசுவரம், பாம்பன் உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்தநிலையில், பாம்பன் புதிய ரெயில்வே மேம்பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி 6ம் தேதி திறக்க இருப்பதை ஒட்டி அங்குள்ள தூக்கு மேம்பாலம் வண்ண ஒளிகளில் ஜொலிப்பதை காணலாம். இரவில் கடலில் இருந்து பார்க்கும் போது புதிய பாம்பன் பாலம் வண்ணமயமாக பல்வேறு கலர்களில் ஜொலிப்பது கண்கொள்ளா காட்சியாக உள்ளது.

# சென்னை: ரெயில் நிலையத்தில் இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை

சென்னை, ஏப்.6

சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த 22 வயது இளம் பெண், சென்னையில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். அவர், வேலை முடிந்து கடற்கரையில் இருந்து மின்சார ரெயிலில் திருவொற்றியூர் வந்தார். பின்னர் திருவொற்றியூர் ரெயில் நிலையத்தில் இறங்கி நடைமேடையில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது மர்ம வாலிபர் ஒருவர், இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்தார். அதிர்ச்சி அடைந்த இளம் பெண், வாலிபரை தாக்கியதுடன், கூச்சலிட்டார். சத்தம் கேட்டு சக பயணிகள ஓடிவந்ததால் அந்த வாலிபர் தப்பி ஓடிவிட்டார். இதுபற்றி கொருக்குப்பேட்டை ரெயில்வே போலீசார் பெண் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அங்குள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை வைத்து மர்ம வாலிபரை தேடி வருகின்றனர்

# கும்மிடிப்பூண்டி: நிலக்கரி லாரி மீது மோதல்...உள்ளேயே சிக்கி தவித்த கண்டெய்னர் ஓட்டுநர் வீடியோ



சென்னை, ஏப்.6

கும்மிடிப்பூண்டி அருகே நிலக்கரியை ஏற்றிக் கொண்டு லாரி ஒன்று சாலையில் சென்றுகொண்டிருந்தது. அப்போது அதே சாலையில் வந்த கண்டெய்னர் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மீது மோதியது.

இந்த கோர விபத்தில் கண்டெய்னர் லாரியின் முன்பக்கம் முற்றிலும் சேதமடைந்தது. இந்த மோதலின் காரணத்தால் இரு லாரிகளும் வசமாக சிக்கியது.

இதனால் கண்டெய்னர் ஓட்டுநர் உள்ளேயே வெகு நேரமாக சிக்கி தவித்தார்.

இது குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அங்கு விபத்தில் சிக்கிய டிரைவரை மீட்க கிரேன் வரவழைக்கப்பட்டது. கிரேன் உதவியுடன் லாரியை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் கண்டெய்னர் லாரியில் சிக்கி தவித்த ஓட்டுநரை மீட்புக்குழுவினர் பத்திரமாக மீட்டு ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனிடையே விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வேளாண் திட்டப் பணிகள் குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

சென்னை, ஏப்.6

மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண்வணிகம்), விற்பனைக்குழு செயலாளர்கள் மற்றும் விற்பனை வாரிய பொறியியல் பிரிவு அலுவலர்களுடன் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் இன்று (03.04.2025) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் செயல்பாடுகளை மாவட்ட வேளாண்மைதுணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) விற்பனைக்குழு செயலாளர்கள்மற்றும்விற்பனை வாரிய பொறியியல் பிரிவு அலுவலர்களுடன் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.




இக்கூட்டத்திற்கு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வேளாண்மை உழவர் நலத்துறை வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனைமற்றும்வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மைத்துறை இயக்குநர் பா.முருகேஷ் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமரவேல் பாண்டியன் முன்னிலை வகித்தனர்.

அனைத்து விற்பனைக்குழுவின் 2024 25ம் ஆண்டின் வரத்து, வரவினம், பொருளீட்டுக்கடன். இலக்கு மற்றும் சாதனை விவரம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. குறைவாக சாதனை அடையப்பெற்ற விற்பனைக்குழு செயலாளர்களுக்கு விரைவில் சாதனை அடைய அறிவுறுத்தப்பட்டது. மேலும், உழவர் சந்தைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள், குளிர்பதன கிட்டங்கியின் பயன்பாட்டு விவரம், முதன்மை பதப்படுத்தும் நிலையங்களின் பயன்பாட்டு விவரம் ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் செம்பினால் செய்யப்பட்ட'அஞ்சன கோல்' கண்டெடுப்பு

விருதுநகர், ஏப்.6

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜய கரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் சுடுமண் முத்திரை, கண்ணாடி மணிகள், மண் குடுவை, மண்பாண்ட பாத்திரங்கள் உள்பட 3,200 க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன.



இந்த நிலையில், வெம்பக்கோட்டை அகழாய்வில் கூடுதலாக செம்பினால் செய்யப்பட்ட'அஞ்சன கோல்' கிடைத்துள்ளது. 13 செ.மீ. ஆழத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்த அஞ்சன கோல், 29.5 மி.மீ. நீளமும், 6.6 மி.மீ சுற்றளவும், 2.64 மி.கி. எடையும் கொண்டதாக உள்ளது.

அகழாய்வு பணியில் தொடர்ந்து பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு வருவதாக அகழாய்வு இயக்குநர் தெரிவித்தார்.

# திம்பம் மலைப்பாதையில் தடுப்புச்சுவரில் நடந்து சென்ற சிறுத்தைப்புலி

ஈரோடு, ஏப்.6

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனப்பகுதியில் புலிகள் மான்கள், யானைகள், சிறுத்தைப்புலிகள், காட்டெருமைகள், உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன. இவை அவ்வப்போது வனப்பகுதியை விட்டு வெளியேறி சாலையில் உலா வருவதும், சாலையைக் கடப்பதும் வாடிக்கையாகி வருகிறது..

இந்த நிலையில் வனப்பகுதியில் இருந்து சிறுத்தைப்புலி வெளியேறியது. பின்னர் சிறுத்தைப்புலி திம்பம் மலைப்பாதை 18வது கொண்டை ஊசி வளைவு அருகே உள்ள சாலையில் சுற்றித்திரிந்தது. அதன்பின்னர் சிறிது தூரம் தடுப்புச்சுவரில் நடந்து சென்ற சிறுத்தைப்புலி அருகே உள்ள வனப்பகுதிக்குள் தாவி சென்று மறைந்தது.

இதனை அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் நேரில் பார்த்து அச்சமடைந்தனர். இதனால் வாகனங்களை சற்று தூரத்தில் நிறுத்திக்கொண்டனர். வாகனங்களில் இருந்தபடியே சிறுத்தைப்புலியை தங்களது செல்போனில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தனர்.

இந்த காட்சி பதிவுகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# சிறுவாபுரி முருகன் கோவிலில் ரூ.72.87 லட்சம் உண்டியல் காணிக்கை வசூல்



திருவள்ளூர், ஏப்.6

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே சிறுவாபுரி கிராமத்தில் வரலாற்று புகழ்மிக்க பாலசுப்பிரமணிய சுவாமி என்ற பெயரில் முருகன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையன்றும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து சாமி தரிசனம் செய்வர். இந்த கோவிலில் தொடர்ந்து 4 செவ்வாய்க்கிழமைகளில் வருகை தந்து வழிபட்டால் நினைத்த காரியம் நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இதனை தொடர்ந்து அவ்வாறு வரும் பக்தர்கள் தங்களது நேர்த்திகடன் நிறைவேறியதும் பணம், தங்கம், வெள்ளிப் பொருட்களை உண்டியலில் காணிக்கையாக செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சிறுவாபுரி முருகன் கோவிலில்பக்தர்கள்காணிக்கை செலுத்திய உண்டியல் தொகை என்னும் பணி நடைபெற்றது. இதில் கடந்த 2 மாதங்களில் ரூ.72.87 லட்சம் பணமும், 51 கிராம் தங்கமும், 9.1 கிலோ வெள்ளியும் உண்டியல் காணிக்கையாக பக்தர்கள் செலுத்தியுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
6.4.2025

# தமிழக காவல் துறையில் 1,299 எஸ்.ஐ. காலிப்பணியிடங்கள்: விண்ணப்பிப்பது எப்படி?

சென்னை, ஏப்.6

தமிழக காவல்துறையில் காவல் சார்பு ஆய்வாளர்(தாலுகா) 933, ஆயுதப்படையில் 366 காவல் ஆய்வாளர்(எஸ்.ஐ.) காலியிடங்கள் என 1,299 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை தமிழ்நாடு சீருடைப் பணியாளா' தோ'வாணையம் வெளியிட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையத்தில் இருந்து ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் டிகிரி முடித்தவர்கள் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

வரும் 7 ஆம் தேதி முதல் மே 3 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். 1,299காவல் சார் ஆய்வாளர்கள் பிரிவில் ஆண்கள் 654,

பெண்கள் 279, காவல் உதவி ஆய்வாளர்கள்(ஆயுதப்படை) ஆண்கள் 255, பெண்கள் 111 பேர் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பளத்தை பொறுத்த வரை மாதம் ரூ.36,900 1,16,600 வரை வழங்கப்படும்.வயதுவரம்பு:1.7.2025 தேதியின்படி

20 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, உடற்தகுதி தேர்வு, உடற்திறன் தேர்வு, மருத்துவ பரிசோதனை மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். எழுத்துத் தேர்வுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் www.tnusrb.tn.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்கள் அறிய அதிகாரப்பூர் அறிவிப்பினை படித்து தெரிந்து கொள்ளலாம்.

# வக்பு மசோதாவுக்கு எதிராக போராட்டம்: சென்னையில் தவெகவினர் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு



சென்னை, ஏப்.6

வக்பு சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில், மத்திய பாஜக அரசால் மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள வக்பு சட்டத்திருத்த மசோதா, இந்திய ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், அரசியலமைப்பின் மாண்பையும் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது என தவெக தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

இந்நிலையில், வக்பு சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தவெகவினர் இன்று போராட்டம் நடத்தினர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தவெக மாவட்ட செயலாளர்கள் சார்பில் மாவட்ட தலைநகரங்கள் உள்ளிட்ட இடங்களில் வக்பு மசோதாவுக்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டது. இதில் ஏராளமான தவெகவினர் மற்றும் இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர். சென்னை பனையூரில் தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

இந்த நிலையில், வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை திரும்ப பெற வலியுறுத்தி தடையை மீறி சென்னையில் போராட்டம் நடத்திய தவெகவினர் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் மொத்தம் 18 இடங்களில் போராட்டம் நடத்திய சுமார் 2,000 பேர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

# 'தேர்தல் வந்துவிட்டால் தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு கச்சத்தீவு மீது காதல் வந்துவிடும்' சீமான்



மதுரை, ஏப்.6

மதுரை காளவாசல் பகுதியில் உள்ள மகாலில், நாம் தமிழர் கட்சியின் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, குமரி மாவட்ட நிர்வாகிகளுக்கான கலந்தாய்வு கூட்டம் நேற்று நடந்தது. இதில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். முன்னதாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

கச்சத்தீவு மீட்பு விவகாரம் தற்போது பேசும்பொருளாக மாறி இருக்கிறது. இந்த விவகாரத்தை, நாங்கள் வித்தியாசமாக பார்க்கிறோம். அதாவது, கொள்ளையடிப்பது, திருடுவது போன்ற குற்றங்கள் செய்யும் ஒருவன், கோவில் திருவிழா வந்தவுடன் காப்புக் கட்டி ஒரு வாரம் விரதம் இருப்பான். அதன்பின்னர் திடீரென அவன் சாமியும் ஆடுவான்.

அந்த சமயத்தில் அவன் செய்த குற்ற செயல்களை எல்லாம் புனிதப்படுத்திக் கொள்வான். அதுபோலத்தான் இந்த கச்சத்தீவு மீட்பு குறித்த பேச்சும் உள்ளது. அது கோவில் திருவிழா, இது தேர்தல் திருவிழா. தேர்தல் வந்துவிட்டால், தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜனதா, பா.ம.க. போன்ற கட்சிகளுக்கு திடீரென கச்சத்தீவு மீது காதல் வந்துவிடும்"

இவ்வாறு அவர் கூறினார்.

# மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கனமழை: குற்றால அருவிகளில் குளிக்க தடை



தென்காசி, ஏப். 6

தமிழகத்தின் தென்காசி மாவட்டத்தில் பிரபல சுற்றுலா தலமான ஆர்ப்பரிக்கும் குற்றால அருவிகள் உள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் குற்றால அருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இங்கு குற்றால சீசன் காலங்களில் மக்கள் கூட்டம் அலைமோதும். மேலும் வார விடுமுறை, தொடர் விடுமுறை போன்ற நாட்களில் குற்றாலத்தின் நீர்வரத்து இருக்கும் போது, பொதுமக்கள் இங்கு மகிழ்ச்சியாக குளித்து செல்வர். மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்யும் மழையின் காரணமாக குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரிக்கும் சமயங்களில், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி, குளிக்க தடை விதிக்கப்படுவதும், நீர்வரத்து சீரானதும் குளிக்க அனுமதிக்கப்படுவதும் வழக்கம்.

இந்நிலையில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக குற்றால மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் குற்றால அருவிகளில் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று தடை விதிக்கப்பட்டுள்ளது. மழை தொடர்ந்து பெய்து வருவதால் நாளை விடுமுறை தினத்தன்றும் அருவிகளில் குளிக்க தடை நீட்டிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் கவலையடைந்துள்ளனர்.

# கொடைக்கானலுக்கு மாற்றுப்பாதை வருகிறதா? அமைச்சர் எ.வ.வேலு பதில்



சென்னை, ஏப்.6

தமிழக சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது, பழனி எம்.எல்.ஏ. செந்தில் குமார், கொடைக்கானலுக்கு சுற்றுலாப்பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வார இறுதி நாட்களில் அதிகளவு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அதைத் தவிர்க்க மாற்றுப்பாதை அமைப்பதற்கான நடவடிக்கை எந்த அளவில் உள்ளது? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்த பிரச்சினை தொடர்பாக கொடைக்கானலுக்கு நான் நேரில் சென்று ஆய்வு செய்தேன்.

கொடைக்கானல் மலையில் மாற்றுப்பாதைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்பணிகள் முடிந்தவுடன் முதல்அமைச்சரின் அனுமதி பெற்று மாற்றுப்பாதை அமைக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று குறிப்பிட்டார்,

# நெல்லை: பண மோசடி வழக்கில் 18 ஆண்டுகள் தலைமறைவாக இருந்தவர் கைது

திருநெல்வேலி, ஏப்.6

திருநெல்வேலி மாவட்டம், மானூர், மேலபிள்ளையார் குளத்தைச் சேர்ந்த காளிதாஸ், கருப்பசாமி, மாரியப்பன் ஆகியோரிடம் மதுரை மாவட்டம், தாசில்தார் நகர், ராயல் அவென்யூவை சேர்ந்த பிரேம்குமார் மற்றும் அவரது மனைவி காளிஸ்வரி இருவரும் சேர்ந்து வேலை வாங்கி தருவதாகக் கூறி ரூ.4 லட்சத்து 5 ஆயிரம் பணத்தை பெற்று மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்சொன்ன நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க, காளிதாஸ் நீதிமன்றத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின்பேரில், நீதிமன்றத்தின் உத்தரவின்படி மாவட்ட குற்றப்பிரிவில் வழக்குபதிவுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 2006ம் ஆண்டு முதல் தலைமறைவாக இருந்து தேடப்பட்டு வந்தவர்களான பிரேம்குமார் மற்றும் காளிஸ்வரியை கைது செய்து நடவடிக்கை எடுக்க, திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவிட்டார். அதன்பேரில் மாவட்ட குற்றப்பிரிவு I டி.எஸ்.பி. விஜயகுமார் மேற்பார்வையில், மாவட்ட குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் அன்னலட்சுமி தலைமையில், எஸ்.எஸ்.ஐ. கண்ணன், ஏட்டுகள் முத்துராமலிங்கம், தமிழ் செல்வி ஆகியோர் பிரேம்குமார், அவரது மனைவி காளிஸ்வரி இருவரையும் தேடி வந்தனர். இந்த நிலையில், பிரேம்குமார் கோயம்புத்தூர் மாவட்டம், வடவல்லி, ஸ்ரீராம்நகர், 3வது அன்பகம் தெரு அருகே இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தனர். இவ்வழக்கில் வேலை வாங்கித் தருவதாக கூறி பண மோசடி செய்து 18 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த குற்றவாளியை சிறப்பாக செயல்பட்டு கைது செய்த மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினரை மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

# "வீர தீர சூரன்" வெற்றி...ரசிகர்களுக்கு நன்றி கூறி வீடியோ வெளியிட்ட விக்ரம்



சித்தா பட இயக்குனர் எஸ்.யு.அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் 'வீர தீர சூரன் 2'. இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷாரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இப்படம் மதுரையை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'வீர தீர சூரன் 2' படம் பல தடைகளை தாண்டி வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

விக்ரம் தனது இன்ஸ்டா பக்கத்தில் "ஒரேயொரு வாழ்க்கை வரலாறாக வாழ்ந்து... அப்படி என ஒருவன் எளிமையாக சொல்லிவிட்டு சென்றுவிட்டான். ஆனால், இந்த வாழ்க்கை இருக்கிறதே எதாவது ஒரு பிரச்னையை தூக்கி வீசுகிறது. உதாரணமாக 'வீரதீரசூரன்' படம் ரிலீஸுக்கு முன்பாக பயங்கரமாக பாராட்டி அனைவரையும் ஆர்வத்தில் ஆழ்த்தினார். அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான், சட்டப் பிரச்னை. உயர் நீதிமன்றம் இதை 4 வாரங்களுக்கு தடை எனக் கூறியது. நானும் எனது இயக்குநரும் இதில் நடித்த அனைவரும் மிகவும் கடினமாக உழைத்து இருக்கிறோம். ரசிகர்களிடம் எப்படியாவது இதைக் கொண்டு சேர்க்க வேண்டுமென நினைத்தோம். என்னால்செய்யமுடிந்ததைச்செய்தேன்..பேராதரவுக்குநன்றிஎனதுரசிகர்களுக்காகமிகவும்எதார்த்தமான, வித்தியாசமான கமர்ஷியல் படத்தை தர நினைத்துதான் இந்தப் படத்தில் நடித்தேன். முதலிரண்டு காட்சிகள் இல்லாமல் வெளியானால் அந்தப் படம் அவ்வளவுதான் என்பது வழக்கமானது. ஆனால், படம் வெளியான பிறகு மக்களிடம் நல்ல ஆதரவு கிடைத்தது. குறிப்பாக குடும்பத்திடம் இருந்து பேராதரவு கிடைத்தது. உங்கள் அனைவருக்கும் நன்றி கூற வேண்டும். படம் பெரிய வெற்றியை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது என உறுதியாக கூறுகிறேன். நாங்கள் நினைத்தது நடந்தது. படம் பார்த்தவர்கள் மகிழ்ந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். பார்க்காதவர்கள் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்" என்றார்.

# மீண்டும் சி.எஸ்.கேவின் கேப்டனாகும் தோனி..? வெளியான தகவல்



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 16 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்த ஆட்டங்களின் முடிவில் புள்ளிப்பட்டியலில் பஞ்சாப், டெல்லி, பெங்களூரு, குஜராத் அணிகள் முதல் 4 இடங்களில் உள்ளன.

இந்த தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நடக்கின்றன. அதில் மாலை 3.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் டெல்லி கேப்பிடல்ஸ் அணிகள் மோத உள்ளன. சென்னை அணி இதுவரை 3 ஆட்டங்களில் ஆடி 1 வெற்றி, 2 தோல்வி கண்டு புள்ளிப்பட்டியலில் 8வது இடத்தில் உள்ளது.

அதேவேளையில் டெல்லி அணி ஆடிய 2 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது. தொடர் தோல்விகளிலிருந்து மீள சென்னை அணி கடுமையாக போராடும். வெற்றிப்பயணத்தை தொடர டெல்லி போராடும். இதனால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இந்நிலையில், டெல்லிக்கு எதிரான இன்றைய ஆட்டத்தில் சென்னை அணியின் கேப்டனாக தோனி செயல்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த மார்ச் 30ம் தேதி ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின் போது சென்னை கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் காயம் அடைந்தார். அவர் பேட்டிங் செய்த போது தேஷ்பாண்டே வீசிய பந்து முழங்கையில் தாக்கியதில் அவர் காயத்தை சந்தித்தார்.

அந்த காயத்தில் இருந்து மீண்டு வரும் கெய்க்வாட் இன்றைய ஆட்டத்தில் விளையாடுவாரா? என்பதில் சந்தேகம் நிலவுகிறது. கெய்க்வாட் களம் இறங்காத பட்சத்தில் இன்றைய ஆட்டத்தில் தோனி கேப்டன் பொறுப்பை ஏற்பார் என தெரிகிறது.

# நடிகை சிம்ரன் பிறந்தநாள்... 'டூரிஸ்ட் பேமிலி' படக்குழு வாழ்த்து

சுப்ரமணியபுரம் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் சசிகுமார். 'ஈசன்' படத்தை இயக்கிய சசிகுமார் அதன்பின் நடிப்பதில் கவனம் செலுத்தினார். அவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான 'அயோத்தி, கருடன், நந்தன்' ஆகிய திரைப்படங்கள் வெற்றிப்படங்களாக அமைந்தன.

அதனை தொடர்ந்து தற்போது சசிகுமார் 'டூரிஸ்ட் பேமலி' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தை 'குட் நைட்' படத்தினை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் தயாரிக்கிறது. அபிஷன் ஜீவிந்த் இயக்கும் இந்தப் படத்தில் சசிகுமாருடன் நடிகை சிம்ரன் நடிக்கிறார். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் டீசர் மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது. இந்த படத்தின் டீசரில் சசிகுமார் சிம்ரன் பேசும் இலங்கை தமிழ் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. 'டூரிஸ்ட் பேமிலி' திரைப்படம் வரும் மே 1ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் நடிகை சிம்ரன்.1995ம் ஆண்டு வெளியான சனம் ஹர்ஜாய் என்ற படத்தின் மூலம் நடிகையாக அறிமுகம் ஆனார். விஐபி படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானவருக்கு முதல் படமே செம ஹிட். அடுத்து விஜய்க்கு ஜோடியாக ஒன்ஸ்மோர் படத்தில் நடித்தார்.இரண்டு படங்களின் வெற்றிக்கு பிறகு நேருக்கு நேர், பூச்சூடவா, அவள் வருவாளா, நட்புக்காக, கண்ணெதிரே தோன்றினாள், துள்ளாத மனமும் துள்ளும், வாலி என வரிசையாக ஹிட் படங்கள் கொடுத்து மக்களின் மனதை வென்றார். தற்போது சசிகுமார் உடன் இணைந்து 'டூரிஸ்ட் பேமிலி' படத்தில் நடித்து வருகிறார். மேலும் இவர்களுடன் இணைந்து யோகி பாபு, மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ், எம் எஸ் பாஸ்கர், ரமேஷ் திலக் ஆகியோர் நடித்திருக்கின்றனர். இந்தப் படத்தை மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

இந்நிலையில், நடிகை சிம்ரனின் பிறந்தநாளையொட்டி, 'டூரிஸ்ட் பேமிலி' படக்குழு சிறப்பு புரோமோ வீடியோவை வெளியிட்டு சிம்ரனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளது.

# ஐபிஎல்: பரபரப்பான ஆட்டத்தில் மும்பையை வீழ்த்தியது லக்னோ



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இன்று (வெள்ளிக்கிழமை) லக்னோவில் நடைபெற்ற 16வது லீக் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி, 5 முறை சாம்பியனான மும்பை இந்தியன்சை சந்தித்தது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் பேட்டிங் செய்த லக்னோ அணி வலுவான துவக்கம் நடைபெற்றது. குறிப்பாக மிட்செல் மார்ஷ் அதிரடி காட்டினார். 31 பந்துகளில் 60 ரன்கள் எடுத்த மிட்செல் மார்ச் விகேன்ஷ் புத்தூர் பந்தில் அவரிடமே கேட்ச் கொடுத்து அவுட் ஆனார். மற்றொரு துவக்க ஆட்டக்காரர் மார்க்கரம் 53 ரன்களில் வெளியேற அடுத்து வந்த வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புகு 203 ரன்களை லக்னோ அணி எடுத்தது.

இதையடுத்து, 204 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட்டிங்கை தொடங்கிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு துவக்க ஆட்டக்காரர்கள் வில் ஜேக்ஸ் (5 ரன்கள்), ரியான் ரிகெல்டான் (10 ரன்கள்) அடுத்தடுத்து அவுட் ஆகி அதிர்ச்சி கொடுத்தனர். எனினும், 3வது விக்கெட்டுக்கு களம் இறங்கிய நமன் திர் அதிரடி காட்டினார். 24 பந்துகளில் 46 ரன்கள் எடுத்து இருந்த அவர் திக்வேஷ் ரதி பந்தில் போல்டு ஆனார். அதிரடியாக விளையாடிய சூர்ய குமார் யாதவ் 43 பந்துகளில் 67 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவர் அவுட் ஆகும் போது 23 பந்துகளில் 52 ரன்கள் வெற்றிக்கு தேவைப்பட்டது.

முக்கியமான கட்டத்தில் சூர்ய குமார் யாதவ் அவுட் ஆனதால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது. இதையடுத்து களத்திற்கு வந்த கேப்டன் ஹார்திக் பாண்ட்யா , முதல் பந்திலேயே பவுண்டரி அடித்து அசத்தினார். மற்றொரு பக்கம் திலக் வர்மாவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் லக்னோ அணி கட்டுக்கோப்பான பந்து வீச்சால் மும்பைக்கு நெருக்கடி கொடுத்தது. கடைசி ஓவரில் மும்பை வெற்றிக்கு 22 ரன்கள் தேவைப்பட்டது. ஆனால், அந்த அணியால் 9 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால், லக்னோ அணி 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாளை நடைபெறும் ஐபிஎல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் டெல்லி கேபிடல்ஸ் அணியும் மோதுகின்றன. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் சென்னை அணி மீண்டும் வெற்றிப்பாதைக்கு திரும்ப வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளது.

# ரஜினியின் "கூலி" ரிலீஸ் தேதி அறிவிப்பு

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த்தின் 171வது படமாக கூலி திரைப்படம் தயாராகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. கூலி திரைப்படம் வருகிற ஆகஸ்ட் மாதம் திரைக்கு வர உள்ளது. இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இத்திரைப்படத்தில் ரஜினிகாந்த் உடன் சுருதிஹாசன், நாகார்ஜுனா, உபேந்திரா, சத்யராஜ், அமீர் கான் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது.

இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் ஐதராபாத், சென்னை மற்றும் பாங்காக் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. படத்தின் பின்னணி வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த படமானது ஆகஸ்ட் மாதம் அல்லது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், படத்தின் டீசர் எப்போது வெளியாகும் என ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கூலி படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் உரிமையை பிரபல நிறுவனமான அமேசான் பிரைம் சுமார் ரூ.120 கோடி கொடுத்து வாங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ரஜினிகாந்த் நடிக்கும் 'கூலி' படம் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.